செய்தி இதழாகப் பதிவு பெற்றது

University of Jaffna Sri Lanka RECEIVED Periodicals Division Library

# தந்தி

இல: 1096 1970 ஜூலை 31 வெள்ளிக்கிழமை ★ விலை சதம் 5

## மீனாட்சி



என்னுங்க, நீதவானுடைய செருப்பைக் கோவிலிலே வைத்து யாரோ "புண்ணியவான்" களவெடுத்தானுமே!

ஆமாங்க, நீதவானிடம் பல செருப்புகள் இருக்குமென்று செருப்பில்லாத "புது வகைச் சோஷலிஸவாதி" எடுத்தானுக்கும்!

## இன்சூரன்ஸ் கூட்டுத்தாபனத்தில்

# மனைவிமாருக்கும் ஏஜண்டு பதவிகள்!

### இன்சூரன்ஸ் கூட்டுத்தாபன உயர் அதிகாரிகள் சிலர் தங்கள் மனைவிமாரை இன்சூரன்ஸ் ஏஜண்டுகளாக நியமித்துள்ளனரா?

இவ்வாறு, மனைவிமாரையும் தங்களுக்கு வேண்டிய சிலரையும் ஏஜண்டுகளாக நியமித்து அவர்களுக்கு பல சலுகைகளை வழங்கி அதனால் வரும் லாபத்தை இந்த அதிகாரிகள் பெறுகின்றனராம்.


கடந்த அரசாங்கத்தின் காலத்திலிருந்தே இந்த மோசடி நடைபெறுவதாக இப்போது பல புகார்கள் கிடைத்துள்ளன.

கூட்டுத்தாபனத்துக்கு நேரடியாகக் கிடைக்கும் பல விண்ணப்பங்களையும் பல மோசடிகள் செய்து தங்கள் மனைவிமாருடையவும் நண்பர்களுடையவும் பெயருக்கு மாற்றி அவர்களுக்கு கமிஷன் கிடைக்க வழி செய்கின்றனராம் இந்த அதிகாரிகள்.

கூட்டுத்தாபன ஊழியர்கள் இவ்வாறு செய்வது விரும்பத்தக்கது அல்ல என்று பல எதிர்ப்புகள் இப்போது தெரிவிக்கப்பட்டு உள்ளன.

இவ்விஷயமாக கூட்டுத்தாபனத்துக்குப் பொறுப்பான வர்த்தக மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன நடவடிக்கை எடுத்துள்ளார்.

சில அதிகாரிகள் தங்களுடைய உறவினருக்கு வழங்கியுள்ள ஏஜன்ஸிகளை உடன் நிறுத்தவும் அமைச்சர் தீர்மானித்துள்ளார் எனத் தெரிய வருகிறது. (ல)



சகல பாடசாலைகளுக்கும் மலிவான தளபாடங்கள் வழங்க கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது. படத்தில் தெரியும் மேசையும், வாங்கும் சிறு வயது மாணவர்களுக்கு என தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த மேசையையும், வாங்கையும் கல்வி மந்திரி பார்வையிடுவதைப் படத்தில் காண்க.

## கொழும்பில் உள்ள

# முஸ்லிம் பாடசாலைகளின் நிலை பற்றி கெனமன் அதிர்ச்சி

கொழும்பில் உள்ள பல முஸ்லிம் பாடசாலைகளின் கட்டடங்கள் மிகவும் மோசமான நிலையில் இருப்பதாகவும் இதைக் கண்டு தான் அதிர்ச்சி அடைந்ததாகவும் வீடமைப்பு நிர்மாணத்துறை மந்திரி திரு. பீட்டர் கெனமன் கூறினார்.

குறிப்பாக கும்பனித்தெரு சாஹிரா கல்லூரியைப் பற்றி தான் கூறுவதாக திரு. கெனமன் குறிப்பிட்டார்.

கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியில் நேற்று பேசும் போது திரு. கெனமன் மேற்கண்டவாறு சொன்னார்.

மாணவர்களிடம் உள்ள திறமையை தகுந்த முறையில் பயன்படுத்த சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

இந்தப் பாடசாலைக்குத் தேவையான தளபாட வசதிகள் பற்றி தான் கல்வி மந்திரியிடம் எடுத்துக் கூறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

கூட்டத்துக்கு முன் கல்லூரி அதிபர் ஜனாப் ஈ. சி. ஆலிப் மந்திரியை பாடசாலையின் பல பகுதிகளுக்கும் அழைத்துச் சென்று காட்டினார். (ல)

## மகாநாடு

நிந்தவூர் ஜூலை 30

அகில இலங்கை திரி சாரணர் மகாநாடு ஆகஸ்ட் மாத இறுதியில் நடைபெறவிருக்கின்றது. (217)

# வருட ஆரம்பத்தில் இனி இடமாற்றம் அமுலாகும்

நாட்டில் உள்ள ஒவ்வொரு அரசாங்க திணைக்களத்திலும் இடமாற்ற சபைகள் ஏற்படுத்தப்பட உள்ளன.

அரசாங்க ஊழியர்களின் இடமாற்றங்களுக்கு இந்தச் சபைகளே இனிப் பொறுப்பாக இருக்கும்.

இது சம்பந்தமான திட்டம் ஒன்றை பொது நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தயாரித்துள்ளார்.

இத்திட்டத்துக்கு மந்திரி சபை அங்கீகாரம் அளித்துள்ளது.

அமைச்சரின் திட்டத்தின்படி, இருபத்தைந்துக்கு மேற்பட்ட இடமாற்றம் செய்யப்படக் கூடிய ஊழியர்களைக் கொண்டுள்ள திணைக்களங்களில் இடமாற்றச் சபைகள் ஏற்படுத்தப்படும்.

ஊழியர்களின் பதவி அந்தஸ்துக்கு ஏற்ப புறம்பான இடமாற்றச் சபைகள் ஏற்படுத்தப்படும்.

உதாரணமாக சுகாதாரத் திணைக்களத்தில் டாக்டர்களுக்குப் புறம்பான இடமாற்றச் சபைகளும், எழுது வினைஞர்களுக்குப் புறம்பான இடமாற்றச் சபைகளும் ஏற்படுத்தப்படும்.

அரசாங்க ஊழியர்களுக்கான சகல இடமாற்றங்களும் இனிமேல் வருட ஆரம்பத்திலேயே அமுல் செய்யப்படும். (ஞ-5)

## நடமாடும் மரக்கறி கடைகள்

கொழும்பு நகரின் முக்கிய இடங்களில் நடமாடும் மரக்கறி கடைகள் அதிவிரைவில் சேவையில் ஈடுபடும்.

கந்தோருக்குச் செல்லும் ஊழியர்களின் வசதிக்காக இவ்வாறு நடமாடும் கடைகளைத் திறப்பதென விற்பனைப் பகுதி தீர்மானித்துள்ளது.

பொலிதீன் பைகளில் போட்டு குறிப்பிட்ட ஒரு விலைக்கு மரக்கறிகள் விற்கப்படும். (ல)

## சபை மூடப்படும்

பட்டதாரிகளுக்கு வேலை வழங்குவதற்காக இவ் வருடம் ஜனவரி மாதத்தில் நிறுவப்பட்ட தனியான சபையை மூடி விடுவதென தீர்மானிக்கப்பட்டது.

## களுத்துறை புஹாரி மஜ்லிஸ்

களுத்துறை [illegible] புஹாரி 27-ம் வருட கந்தூரி வைபவம் இன்று 31-ம் திகதி வெள்ளிக்கிழமை பின்னேரம் மஃரிபாய் ராத்திப் மஜ்லிஸுடன் ஆரம்பமாகி, ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி சங்கைக்குரிய அஸ்ஸெய்யித் அகமத்பின் அபூபக்கர் பின் அலவி பின் அய்தூர் ரசமான் அல் மஷ்ஹூர் மௌலானா முகத்தமில் முகத்தமீன் தலைமையில் மவ்லூத் மஜ்லிஸ் நடைபெற இருக்கிறது. (13)

# பரீட்சையில் வெளிநடப்பு

இலங்கை நிர்வாக சேவையின் 4-ம் தர பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்த சுமார் 200 பேர் நேற்று இப் பரீட்சையைப் பகிஷ்கரித்தனர்.

கொழும்பு ஹெவ்லொக் டவுண் லும்பினி வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இப்பரீட்சையின் போது இவர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

நிர்வாக சேவையில் சேருவதற்கு மட்டுமே போட்டிப் பரீட்சை அவசியம் என்றும் வகுப்பேற்றம் பெற பரீட்சை தேவையில்லை என்றும் எதிர்ப்புக் காட்டியே பரீட்சை ஆரம்பமாவதற்கு முன் இவர்கள் இவ்வாறு வெளிநடப்புச் செய்தனர்.

சுமார் 50 பேர் மட்டும் பரீட்சை எழுதினர். (ல)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணவர் உட்பட ஐவர் மீது குற்றச்சாட்டு

# தாதியைத் தாக்கி விட்டு கொள்ளை அடித்தனராம்

### வழக்கு விசாரணை மற்றொரு தினத்துக்கு ஒத்திவைப்பு

**நான் டாக்சியைக் கடக்கும்போது, முதலாவது எதிரி திடீரென என்னை பாய்ந்து பிடித்து பலாத்காரமாக டாக்சிக்குள் போட்டார். இதற்கு அவரது இரு சகோதரர்களும், தகப்பனும் உதவி புரிந்தார்கள். டாக்சிக்குள் வைத்து என்னைத் தாக்கினர். பின்னர் வன்டுறம் என்ற இடத்திற்கு கொண்டு சென்று அங்கு வைத்தும் என்னைத் தாக்கி என் ஆபரணங்களை அபகரித்து விட்டனர்.**

கொழும்பு தெற்கு நீதிமன்ற மேலதிக நீதவான் திரு. ஜோர்ஜ் அட்டறப்பொல முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட பெண் கடத்தல் வழக்கு ஒன்றில் சாட்சியம் அளித்த கொழும்பு தெற்கு அரசினர் ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் தாதியான லீலா ஜெயவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேற்படி தாதியைக் கடத்திச் சென்று அவரைத் தாக்கி காயம் உண்டுபண்ணியதாக அவரது கணவன், கணவனது தந்தை, கணவனது இரு சகோதரர்கள் ஆகியோர்மீது குற்றஞ்சாட்டி மிரிகன பொலீஸார் இவ் வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர்.

கடந்த ஏப்ரல் மாதம் 9-ம் திகதி மிரிகன வாசியான லீலா ஜெயவர்தனவைக் கடத்திச் சென்று காயப்படுத்தியதாக என். ஜெயவர்தன, ஆர்தர் ஜெயவர்தன, கே. ஜெயவர்தன, பீ. ஜெயவர்தன, ஜி. பீ. ஆரியதாச ஆகியோர்மீது இவ் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

திருமதி. ஜெயவர்தனவிற்குச் சொந்தமான தங்க ஆபரணங்களைக் களவாடியதாகவும் எதிரிகள் மீதும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

லீலா தொடர்ந்து சாட்சியம் அளிக்கையில் தெரிவித்ததாவது:—

"முதலாவது எதிரி எனது கணவர். நான் அவருடன் இரண்டு மாதங்கள்தான் அமைதியாக வாழ்க்கை நடத்தினேன். அப்படியிருந்தும் அவர் மூலம் எனக்குக் குழந்தையுண்டு.

"நான் அவரைப் பிரிந்து மிரிகெனவவில் வாழ்ந்து வருகிறேன்.

"சம்பவம் நடைபெற்ற தினத்தன்று அதிகாலை 6 மணிக்கு களுபோவிலைச் சந்தியை அடைந்தேன். சந்திக்கு அருகில் டாக்சி ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது.

"நான் டாக்சியைக் கடக்கும் போது முதலாவது எதிரி திடீரெனப் பாய்ந்து என்னைப் பிடித்து டாக்சிக்குள் போட்டார். மற்றைய எதிரிகளும் அவருக்கு ஒத்தாசை புரிந்தனர்.

"டாக்சிக்குள் என்னை இருத்தி எல்லோரும் அடித்தார்கள். பின்னர் வன்டுறும்பவில் உள்ள முதலாவது எதிரியின் தந்தையார் வீட்டிற்கு கொண்டு செல்லப்பட்டேன். அங்கு என்னை ஓர் அறையில் பூட்டிவைத்து அடித்தார்கள். அத்துடன் என் தங்க ஆபரணங்களையும் பலாத்காரமாகப் பறித்து விட்டனர்.

"அதன்பின்னர் பொலீஸார் அங்கு வந்து அக்மீமன பொலீஸ் நிலையத்திற்கு என்னைக் கொண்டு சென்றனர். அங்கிருந்து காலி அரசாங்க ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டேன். ஏழு நாட்கள் காயங்களுக்காக வார்ட்டில் இருந்து சிகிச்சை பெற்றேன்.

டாக்டர் ரித்ரஸ் பீ. ரி. பெர்ணண்டோ சாட்சியமளிக்கையில், "வழக்காளியை நான்தான் பரிசோதித்தேன். அவரது உடம்பில் 18 காயங்கள் இருந்தன. அத்துடன் கழுத்தில் நக அடையாளங்களும் காணப்பட்டன. இவை சண்டை, கைகலப்பின்மூலம் ஏற்பட்டிருக்கலாம்" என்று சொன்னார்.

இந்நிலையில் நீதவான் வழக்கை செப்டெம்பர் மாதம் 14-ம் திகதிக்கு ஒத்திவைத்தார். (-7)

## திருட்டு வழக்கில் எதிரி விடுதலை செய்யப்பட்டார்

ஆசை நாயகி வீட்டிலிருந்த எனது கணவர் என்னைக் கண்டதும் ஒளிந்து விட்டார். நான் வீடுதிரும்பிக்கொண்டிருந்த சமயம் என்னை வழிமறித்த எதிரி என்னிடமிருந்த 100 ரூபா பணத்தைப் பறித்ததுடன் என்னை ஏசித் துரத்தினர்.

கண்டி மாஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் நீதவான் திரு. எவ். பீ. ஜீ. பெர்ணண்டோ முன்னிலையில் எடுக்கப்பட்ட திருட்டு வழக்கொன்றில் சாட்சியமளித்த வழக்காளியான பெண் ஒருத்தி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த பெப்ரவரி மாதம் 15-ம் திகதி வெரலுகொல வாசியான கே. ஜி. பொடிகாமினி என்ற திருமணமான பெண்ணைத் தகாத வார்த்தைகளால் ஏசியதாகவும், அவரிடமிருந்து 100 ரூபாவைக் களவாடியதாகவும், அதே இடத்தைச் சேர்ந்த ஜி. ஆர். விஜயசுந்தரா என்பவர் மீது குற்றம்சாட்டி கடுகண்ணாவை பொலீசார் இவ் வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர்.

பொடிகாமினி தொடர்ந்து சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:— "சம்பவம் நடந்த தினம் எனது கணவர் வீட்டிற்கு வர நேரம் சென்றதால், நான் அவரைத் தேடி ஓர் தேநீர்கடைக்குச் சென்றேன். அப்போது நேரம் இரவு 8-30 மணியிருக்கும். அங்கு அவர் ரிக்கிரி பண்டாரவின் வீட்டிற்குச் சென்றுள்ளதாகத் தெரிவித்தார்கள். நான் பின்னர் அந்த வீட்டிற்குச் சென்றேன். அங்கிருந்த எனது கணவர் ஒளிந்து விட்டார்."

நீதவான்: "ஏன் அவர் ஒளிய வேண்டும்? அவரது ஆசைநாயகி அங்கேயா இருந்தாள்?"

"ஆம் நானும் அதை அறியவே அங்கு சென்றேன்"

சாட்சி மேலும் தெரிவித்ததாவது:— "பின்னர் நான் வீடுநோக்கி வந்து கொண்டிருந்தேன். அப்போது வழிமறித்த எதிரி என்னைத் தகாத வார்த்தைகளால் ஏசியதுடன், எனது பணம் ரூபா 100 யும் பறித்துக் கொண்டார்"

நீதவன்: கணவனை தேடிச் சென்றபோது ஏன் காசையும் எடுத்துச் சென்றாய்?

சாட்சி: எனது வீடு விதிகும் பாதுகாப்பில் இல்லாததால் காசையும் கையுடன் எடுத்துச் சென்றேன்.

நீதவான்: எதிரி என்னத்திற்காக உம்மை பயமுறுத்தி ஏச வேண்டும்? அவருக்கு உம்மேல் கோபமா?

சாட்சி: எதிரி எனது கணவரின் சகோதரர்

இந் நிலையில் எதிரி தரப்பு வழக்கறிஞரின் தொகுப்புரையைத் தொடர்ந்து, நீதவான் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார். (-7)

## 'மதுபானக் கடையில் மூவர் மது அருந்தியதைக் கண்டேன்'

நீர்கொழும்பு, ஜூலை, 30

சம்பவதினம் இரவு 7-45 மணி போல் மூன்று பேர் மதுபான கடையில் மது அருந்துவதைக் கண்டேன், பின் முதல் எதிரி வெளியில் சென்று சிறிது நேரத்தில் கையில் பார்ஸல் ஒன்றுடன் திரும்பி வந்தார். பெட்டி ஒன்றை வெளியில் எடுத்து அதனுள் இருந்து பண நோட்டு போன்ற ஒன்றை எடுத்து வயதான ஒருவரிடம் கொடுத்தார்.

கள்ள பண நோட்டு அச்சடிக்கும் உபகரணங்கள் வைத்திருந்ததாக இருவர் மீது குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கொன்றில் ரன்பண்டார (29) என்பவர் மேற்கண்டவாறு கூறினர்.

நீதிபதி திரு. பி. பி. ரம்புக்வெல்லை முன் இவ் வழக்கு விசாரிக்கப்பட்டது.

கள்ள நோட்டு அச்சடிக்கும் உபகரணங்களை வைத்திருந்ததாகவும் அவற்றை விற்க முயன்றதாகவும் ஜோசப் பெர்ணண்டோ, எம். ஏ. ஏ. மெதிவ் ஆகியோருக்கு எதிராக இவ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ரன்பண்டார சாட்சியம் அளிக்கையில், மதுபானக் கடையில் எதிரிகள் குடித்ததற்கு வயதான நபர் ஒருவரே பணம் செலுத்தினார் என்றும் எதிரிகள் கடையை விட்டு வெளியேறும் போது கைது செய்யப்பட்டதாகவும் கூறினார்.

மேல் விசாரணை ஆகஸ்ட் 8-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ல)

## 'தமிழர்—சிங்களவர் வேற்றுமை கிடையாது'

பதுளை, ஜூலை 30

"இந் நாட்டில் தொழிலாளர் வர்க்கத்துக்கு இயன்ற சேவை செய்திருப்பது பண்டாரநாயக்காவின் அரசாங்கங்களே. இவ்வரசாங்கம் தமிழர்களின் நன்மையை கருத்தில் கொண்டு ஒரு தமிழ் மந்திரியையும் நியமித்துள்ளது. ஐக்கிய முன்னணி அரசுக்கு தமிழர், சிங்களவர் என்ற வேற்றுமை கிடையாது."

வீடமைப்பு, நிர்மாணத்துறை உதவி மந்திரி திரு. பி. எச். பண்டார மேற்கண்டவாறு சொன்னார்.

பதுளை எலதலு தோட்டத்தில் தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு உபசாரமொன்றின் போதே அவர் இவ்வாறு சொன்னார்.

ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஜனாப் அஸீஸ், திரு. பண்டார ஆகியோருக்கு தோட்டத்துக் கோயிலடியில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

தோட்டத் தொழிலாளரின் சிறந்த தலைவரான ஜனாப் அஸீஸ் தற்போது எம். பியாகவும் நியமிக்கப்பட்டிருப்பதை எடுத்துக் கூறிய திரு. பண்டார, தோட்டத் தொழிலாளர் பிரச்சினைகளை அவர் அரசிடம் எடுத்துக் காட்டும் சகல சந்தர்ப்பங்களிலும் அவற்றைத் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவித்தார்.

ஜனாப் அஸீஸ் பேசுகையில், கடந்த அரசு தோட்டத் தொழிலாளர் விஷயத்தில் ஒரு விதமான சேவையையும் செய்யவில்லை என்று கூறினார். (ல)

### மூச்சுக்கூடே போதும்

கசிப்பு வடிக்கும் குழு ஒன்று கட்டுநாயக்கா விமான நிலையத்தில் அட்டகாசத்தில் இறங்கியுள்ளது. இக் குழுவின் கசிப்பு வடிக்கும் உபகரணங்கள் சமீப காலத்தில் பறிக்கப்பட்டிருந்தன. விமான நிலையக் காவலர்களை நள்ளிரவில் தாக்கிய இக்குழு அவ்வுபகரணங்களை மீண்டும் மீட்டு வந்துள்ளது. இப்போது விமான நிலையப் பொலீஸாருக்கு இக்குழு ஒரு எச்சரிக்கையும் விடுத்துள்ளது. அதாவது தங்கள் கசிப்பு வடிக்கும் கருமத்தில் விமான நிலையப் பொலீஸார் தலையிடுவதானல், விமான நிலையத்துக்கு வரும் விமானங்களைச் சுட்டு வீழ்த்தி விடுவது என்பதுதான் அவ்வெச்சரிக்கை. இத்தனை அட்டகாசத்துக்கும் காரணம் விமான நிலையப் பொலீஸாருக்குக் கசிப்பு வடிப்போர் மீது நடவடிக்கை எடுக்க அதிகாரம் இல்லாதிருப்பதேயாகும். ஆனல், அது ஒருபுறமிருப்ப, இக்குழுவின் பயமுறுத்தலோ மிகப் பயங்கரமானது. எனினும் இக்குழு இத்தனை தூரத்துக்குப் போகத் தேவையில்லை. விமானத்தைச் சுட்டுப் பொசுக்குவதற்கு இக்குழுவினரின் கசிப்பு மூச்சின் சூடே போதியதாகுமே!

கந்தி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவாகரத்துக்கு அனுமதி அளித்து தீர்ப்பு

# திருமணத்தின் பின்னர் கைவிட்டுச் சென்றார்

### நீதிமன்றத்தில் அழகிய இளம் பெண் சாட்சியம்

**திருமணத்தின் பின்னர் எனது கணவர் எனது பாட்டி வீட்டுக்கு என்னைக் கூட்டிக் கொண்டு போனார். ஒரு மாதத்துக் குப் பின்னர் மீண்டும் வந்து என்னைத் திருப்பி அழைத்துக் கொண்டு போவதாகச் சொல்லிச் சென்றார். ஆனால் திரும்பி வரவில்லை.**

கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி திரு. ஜே. எப். ஏ. சொய்ஸா முன்னிலையில் நடைபெற்ற விவாகரத்து வழக்கு ஒன்றில் சாட்சியம் அளிக்கையில் தெமட்டகொடை அரமயா வீதியைச் சேர்ந்த சுசிலா (21) என்ற இளம் பெண் மேற்கண்டவாறு சொன்னார்.

இந்த வழக்கில், கனமுல்லையைச் சேர்ந்த எம். பி. ஜயரத்ன விஜேசிங்கா என்பவர் எதிர் மனுதாரர்.

மனுதாரரான சுசீலா சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:

"1968 ஜூன் 27-ம் திகதி எதிர் மனுதாரரைத் திருமணம் செய்தேன். திருமணம் முடிவடைந்தவுடன் எனதுபாட்டி வீட்டுக்கு என்னை அழைத்துச் சென்றார். ஒரு மாத காலத்தில் மீண்டும் வந்து என்னை அழைத்துச் செல்வதாகக் கூறிச் சென்றார்.

"அதன் பின்னர் அவர் வீட்டுக்குத் திரும்பி வரவில்லை. எனது பெற்றோர், அவரை மீண்டும் வீட்டுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற் கொண்டனர்.

"ஆனால் மனைவியில் எனக்கு விருப்பமில்லை என்றும், வீட்டுக்கு வர முடியாது என்றும் கூறி மறுத்துவிட்டார்"

இவ்வாறு சாட்சி சொன்னார்.

வேண்டு மென்று கைவிட்டுச் சென்றார் என்ற மனுதாரரின் மனுவை ஏற்றுக் கொண்ட நீதிபதி விவாகரத்துக்கு சம்மதம் அளித்துத் தீர்ப்பு வழங்கினார். (5)

### ரூபா 7½ கோடி புதையலில் பங்கு கேட்கிறார் அவர்

சிட்னி, ஜூலை 28

கிரீஸ் நாட்டில் உள்ள ஒரு தனிநத் தனித் தீவில் ரூ. 7 கோடியே 50 லட்சம் பெறுமானமுள்ள புதையல் கிடக்கிறது. அதை வெளியே எடுத்த பிறகு பங்கிட்டுக் கொள்வதில் கிரேக்க அரசாங்கத்துக்கும், ஆஸ்திரேலியரான சார்ல்ஸ் வீட் என்பவருக்கும் உடன்பாடு ஏற்படா விட்டால் அப்புதையல் தொடர்ந்து அங்கேயேதான் மண்ணுக்குள் கிடக்கும்.

"அதை எடுத்த பிறகு எனக்கு நியாயமான பங்கு தருவதாக கிரேக்க அரசாங்கம் வாக்களித்தால் அப்புதையல் எங்கே இருக்கிறது என்று காட்டத் தயார்" என்று இப்போது அத்தீவிலிருந்து திரும்பி வந்துள்ள வீட் கூறினார்.

ஆனால் கிரேக்க அரசாங்கமோ அவருடைய நிபந்தனைகளை ஏற்கத் தயாராக இருப்பதாக இதுவரை குறிப்பு காட்டவில்லை. அவரும் அரசாங்கம் வாக்களிக்காத வரை இடத்தைக் காட்டப் போவதில்லை என்று பிடிவாதமாக இருக்கிறார்.

சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னர் கடற் கொள்ளைக்காரர் ஒருவர் பிரிட்டிஷ் கப்பலிலிருந்து கொள்ளையடித்த தங்கம், வெள்ளி மற்றும் இதர அரிய பொருட்கள் அத்தீவில் இவ்வாறு புதைத்து வைக்கப்பட்டுள்ளன.

எனினும் வீட் புதையலைத் தோண்டி எடுப்பதில் ஈடுபடவில்லை. ஏனெனில் "எங்களால் அவற்றை இந்நாட்டிலிருந்து அனுமதியின்றி எடுத்துச் செல்ல முடியாது என்பதை உணர்ந்தோம். தவிர, புதையல் இருக்கிறது என்பதை ஊர்ஜிதம் செய்து கொள்வதற்காகக்கூட நாங்கள் தோண்ட விரும்பவில்லை. ஏனெனில் தோண்டப்பட்ட இடம் எது என்பது பார்த்த மாத்திரத்தில் சட்டென்று தெரிந்து விடும் என்பதால் பிறர் அங்கு தோண்டி அவற்றை எடுத்துக் கொண்டு விடலாம்" என்று வீட் விளக்கினார்.

எனவே அவர் வேறு வழியின்றி ஆஸ்திரேலியா திரும்ப நேரிட்டது. "இனி எல்லாம் கிரேக்க அரசாங்கத்தின் கையில்தான் உள்ளது. அவர்கள் என்னுடன் உடன்பாட்டுக்கு வரவில்லையென்றால் அப்புதையல் வேறு யாராலும் கண்டுபிடிக்கவே முடியாது. யாருக்கும் அது கிட்டாது" என்றார் அவர். (யழூ

(ய)

### சம்மாந்துறை பட்டின சபை தேர்தல்

நிந்தவூர் ஜூலை 30

பொத்துவில் தொகுதியைச் சேர்ந்த சம்மாந்துறைப் பட்டின சபைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் எதிர்வரும் 4ம் திகதி தாக்கல் செய்யப்படவிருக்கின்றன. (217)

### ஹொலிவூட் கொலை வழக்கில் இளம் பெண் சாட்சியம்

கொலைகள் நடைபெற்ற அன்று அந்த அயலில் உள்ள ஆண்களும் பெண்களும் பயத்திலே நடுங்கித் தம் உயிர்களைக் காப்பாற்ற நாலாபக்கமும் பிரிந்து ஓடினர்கள்.

ஹொலிவூட் நடிகை ஷாரன் டேட் உட்பட ஏழு பேரை ஹிப்பி கோஷ்டியினர் படுகொலை செய்த வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது சாட்சியமளித்த முடிக்குரிய தரப்பு முக்கிய சாட்சியான 21 வயதான லின்டா கஸாபியன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:– இக் கொலைகள் மிகவும் கொடூரமான முறையில் செய்யப்பட்டன. இதுபற்றி என்னால் விபரிக்க முடியாமல் என் உணர்ச்சிகள் தடுக்கின்றன.

ஹிப்பி கோஷ்டியில் ஒருவராக இருந்தவரும், இரண்டு குழந்தைகளின் தாயுமான திருமதி கஸாபியன், நடிகையின் வாசஸ்தலமான ஹொலிவூட் மாளிகையினுள் ஐந்து பேர் எவ்வாறு கொடூரமாக கொலை செய்யப்பட்டனர் என்பது பற்றி விபரித்தார். மாளிகையின் வெளியில் அன்றிரவு நடைபெற்ற இரு கொலைகள் பற்றியும் அவர் சாட்சியம் அளிக்க உள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:– இக் கொடூரக் கொலைகள் நடைபெற்ற போது என்னால் என் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அதனால் ஓடிச் சென்று "தயவு செய்து இதை நிறுத்துங்கள்" என மன்றாடினேன்.

அப்போது ஹிப்பி கோஷ்டியில் ஒருவரான குமாரி அற்கின்ஸ் "காலம் கடந்து விட்டது" என பதிலளித்தார்.

ஜேஸ் பேரி என்ற பெண்ணை 44 தரம் கத்தியால் குத்தியதைக் கண்ட என் கண்கள் கலங்கின என தெரிவித்தார். (7)

### மலைநாட்டு ரயில்களில் திருடர்கள் அட்டகாசம்

நாவலப்பிட்டி, ஜூலை 30

மலைநாட்டு ரயில்களில் திருடர் அட்டகாசம். ஜேப்படி திருடர்கள் அதிகரித்துள்ளதால் பிரயாணிகள் இரவு ரயில்களில் பிரயாணம் செய்யப் பயப்படுகிறார்கள்.

கொழும்பிலிருந்து பண்டாரவளை நோக்கிச் சென்ற இரவு ரயில் வண்டி ஒன்றில் ஒரு பிரயாணியிடம் திருடர்கள் கைவரிசை காட்டியதைத் தொடர்ந்து அவர் அபாயச் சங்கிலியை இழுத்து ரயிலை நிறுத்தவே திருடர்கள் ஓடி மறைந்த சம்பவம் வட்டகொடாவிற்கும் – கிரேட் வெஸ்டன் ரயில் நிலையத்திற்குமிடையில் நடைபெற்றுள்ளதாக தலைமைக் கந்தோரான நாவலப்பிட்டிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ரயிலை நிறுத்தித் துரத்திய பதுளை பிரயாணி விழுந்து உடலில் காயங்களுடன் காணப்பட்டதாகவும் புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (215)

### பேராதனையில் கார்–லொறி மோதல்


உடுநுவர, ஜூலை. 30

பேராதனைப் பல்கலைக்கழக அக்பர் மண்டபத்துக்கு அருகாமையில் பேராதனை – கம்பளை பகிரங்கப் பாதையில் வைத்து நடைபெற்ற கார் லொறி விபத்து ஒன்றின் விளைவாக மூன்றுபேர் அபாயகரமான நிலையில் கண்டி அஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

விபத்தில் சம்பந்தப்பட்ட கார் பெரும் சேதம் அடைந்துவிட்டது.

பேராதனைப் பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (312)

### குறும்புக்காரச் சுப்பி



# பல்லைப் பிடுங்கி எறிவதுபோ
# கருவைச்சிதைக்கும்ஜப்பா



ஜப்பானில் கருச்சிதைவு செய்வது என்பது மிக இலேசான காரியம். மிகப் பத்திரமான முறையில் கருச்சிதைவு செய்து கொள்ளலாம். எவ்வித பயமோ, அச்சமோ, கூச்சமோ இன்றி மிக எளிதாகவும் கருச்சிதைவுக்கு ஏற்பாடும் செய்து கொள்ளலாம்.

எந்த விதமான கருச்சிதைவு வேண்டும்? எவ்வித செலவுக்குள் அவை இருக்க வேண்டும்? நீங்கள் உங்கள் வரவுக்குத் தக்கபடி அதைச் செய்து கொள்ளலாம். கருச்சிதைவு செய்வது ஜப்பானில் சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட்டுள்ளது. என்றாலும் ஜப்பானிய அரசாங்கம், அது பற்றி டமாரம் அடிப்பதில்லை, அதிக பிள்ளைகளைப் பெறாதீர்கள் என்றோ அன்றி "எல்லோரும் கருச்சிதைவு செய்வோம் வாருங்கள்" என்றோ அங்கு பிரசாரம் நடைபெறுவதுமில்லை. அவசியமும் அவசரமும் ஏற்பட்டாலன்றி கருச்சிதைவு நடைபெறுவதை ஜப்பானிய அரசாங்கம் விரும்புவதில்லை.

கருச்சிதைவு வேலைகள் திரைமறைவில் நடப்பதில்லை. சர்வ சாதாரணமாக நடைபெறுகின்றன. பெரிய பெரிய வைத்தியர்கள் தான் இவற்றைச் செய்கிறார்கள். ஜப்பான் நாட்டிலுள்ள கருச்சிதைவுக் கொள்கைகள் பற்றி வெளிநாட்டாருக்கு அதிகம் தெரியாது. என்றாலும் வாழ்க்கையில் தவறிவிட்ட அமெரிக்க யுவதிகள் அடிக்கடி இங்கு வந்து போகிறார்கள். அமெரிக்காவிலிருந்து ஜப்பானுக்கு விமான மூலம் வந்து ஒருவருக்கும் தெரியாமல் காரியத்தை ஜமாய்த்துக் கொண்டு போய் விடுகிறார்கள். ஆனால் பிற நாட்டவர் யாராவது கருச்சிதைவு செய்ய வேண்டுமானால் அவர்களுக்குக் கூடுதல் கட்டணங்கள் அறவிடப்படுகின்றன.

ஆமாம். அமெரிக்க யுவதியொருத்திக்கு கருச்சிதைவு செய்ய வேண்டுமானால் அவள் டாக்டருக்கு மட்டும் 300 டாலர் கொடுக்க வேண்டும். 300 டாலர் என்ன ஐநூறு டாலர் கொடுத்தும் பணம் படைத்த அமெரிக்க யுவதிகள் இங்கு வந்து கருச்சிதைவு செய்து கொள்கிறார்கள்.

ஜப்பானில் பின்வரும் நாலு முக்கிய காரணங்களில் ஏதாவது ஒன்றை முன் வைத்துக் கருச்சிதைவு செய்து கொள்ளலாம்.

பிள்ளைப்பேறும் தாயின் சௌக்கியத்தைப் பாதிக்குமானால் அல்லது;

பரம்பரை வியாதியால் தாய் பீடிக்கப்பட்டிருந்தால் அல்லது கற்பழிப்புச் செய்ததன் மூலம் பிள்ளைப் பேறு கிட்டியிருந்தால் அல்லது;

தாயின் வருங்கால சுபீட்சத்துக்கு இடையூறு விளைவிக்குமாயிருந்தால், கருச்சிதைவை எந்தப் பெண்ணும் செய்து கொள்ளலாம்.

ஆமாம்! மேலே சொன்ன நான்காவது காரணத்தைப் பாருங்கள். தாயின் வருங்கால சுபீட்சத்துக்கு பிள்ளைபேறு இடையூறு விளைவிக்குமாயிருந்தாலும் எவரும் கருச்சிதைவு செய்து கொள்ளலாம் என்று அது கூறுகிறது.

மணமாகாத யுவதிகள் யாராவது தவறான நடத்தையில் ஈடுபட்டு, அதன் மூலம் கருத்தரித்திருந்தாலும் கருச்சிதைவு செய்ய இந்த நான்காவது காரணம் வகை செய்திருக்கிறது. யுவதியொருத்தி கருத்தரித்திருந்தால் நிச்சயம் அவளின் வருங்கால வாழ்வு பாதிக்கத்தானே செய்யும். ஆதலினால் தானோ என்னவோ ஜப்பான் அரசாங்கம் இந்தக் காரணத்தையும் சேர்த்துக் கொண்டிருக்கிறது.

ஜப்பானில் கருச்சிதைவு செய்வதற்கு யாரும் அயலாருக்கோ, அன்றிச் சமூகத்துக்கோ பயப்படத் தேவையில்லை. டாக்டர் ஒருவரிடம் சென்று கருச்சிதைவு செய்யப் போகிறேன் என்று சொன்னால் போதுமானது. உடனே அவர் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து விடுவார். ஆனால் மணமாகாத யுவதிகள் இது விஷயத்தில் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். ஏனெனில் யுவதியொருத்தி கருச்சிதைவு செய்து கொண்டால் போதும் அங்குள்ள மஞ்சள் வாராந்திரப் பத்திரிகைகள் அவற்றைப் பிரசுரித்து விடுகின்றன.

இது பற்றிய சம்பவம் ஒன்று நடந்தது.

பிரான்சைச் சேர்ந்த ஒரு பிரபல வர்த்தகர். அவருக்கும் சினிமா நடிகையொருத்திக்கும் நெடுநாட்களாகத் தொடர்பு ஏற்பட்டிருந்தது.

அந்த சினிமா நடிகை மணமாகாதவர். இந்த பிரஞ்சு வாலிபரைச் சந்திக்க அடிக்கடி வீட்டுக்கு வருவார்.

நடிகை கருத்தரித்து விட்டார்.

கருச்சிதைவு செய்துகொள்ள வேண்டிய கட்டம் வந்து விட்டது. ஏனெனில் நடிகைக்கு வெளிநாட்டவரான அந்த வாலிபரை மணம்முடிக்க விருப்பமில்லை. வெளிநாட்டவரை மணந்தால் தனது சினிமாத் தொழிலுக்கு கூடுதல் வாய்ப்பு கிடைக்காமல் போய்விடும் என்ற பயத்தாலேயே அவள் மணம் முடிக்க மறுத்திருந்தாள்.

பிரெஞ்சு நண்பர் அவசர வியாபார அலுவலாக ஹாங்காங் போகவேண்டி யிருந்தது. எனவே இந்த கருச்சிதைவு விவகாரத்தை அவர் ஒருவர் தலையில் போட்டுவிட்டுப் போய் விட்டார்.

டோக்கியோ நகரில் கருச்சிதைவைச் செய்தால் விஷயம் அம்பலமாகிவிடும் என்று நடிகை பயந்தார்.

"எங்கேயேனும் குக்கிராமத்துக்குப் போனால் தான் நல்லது. அப்படியானால்தான் பத்திரிகைக்காரன் கையிலோ அன்றிப் பொது மக்களின் பார்வையிலிருந்தோ நாங்கள் தப்பலாம். இந்தக் காலத்தில் நடிகைகளை மக்கள் எளிதாக அடையாளம் கண்டு விடுவார்கள். எனவே நீங்கள் புதிய ஹேயர் ஸ்டைல் செய்து, உடைகளை மாற்றி அமைத்துக் கொண்டு வாருங்கள். நாகோய நகர்ப் பக்கம் போவோம்" என்று அந்த நடிகையிடம் கூறப்பட்டது. அவளும் அதற்கு உடன்பட்டாள்.

அடுத்த நாள் கருச்சிதைவு தினம் வந்தது. ஆஸ்பத்திரிக்குச் சென்று கருச்சிதைவு நடந்தது. டாக்டருக்கு 20 டாலர் ஆஸ்பத்திரிக்கு 10 டாலர் செலவாயிற்று. கச்சிதமாக எல்லாம் முடிந்து விட்டது.

நடிகை கொஞ்சம் வெளிறிப் போய்க் காணப்பட்டாள். கருச்சிதைவால் ஏற்பட்ட மாற்றம் இதுதான்.

இந்த நடிகையின் காதலனை அந்த பிரெஞ்சு வாலிபன் இவளைக் கைவிட்டு விட்டான். இவளும் அவனை மறந்து, வேறொரு நடிகனை மணந்து இப்பொழுது வாழ்ந்து வருகிறாள். இந்தக் காதல் முறிவுக்கு இந்தக் கருச்சிதைவுதான் காரணமாயிருக்க வேண்டும்.

கருச்சிதைவு செய்வது என்பது ஜப்பானில் ஒரு பல்லைப் பிடுங்கி விற்பதிலும் பார்க்க மிக இலேசான காரியமாகப் படுகிறது. ஆமாம், கருச்சிதைவு செய்யப் போகிறவர்கள் கருச்சிதைவு செய்யப் போவதாகச் சொல்வதில்லை. மாறாக "பல் வைத்தியரிடம் போகிறேன்" என்று பரிபாஷையில் சொல்லுவார்கள். விஷயம் தெரிந்தவர்கள் "அம்மாவுக்கு கருச்சிதைவு நடக்கப் போகிறது" என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

# சினிமா ஜோக்கர்

சினிமாவில் எப்படியும் கதாநாயகனாக நடிக்க முடியாமற் போனாலும் ஏதாவது ஒரு வேடத்தில் தலையை நீட்டியே தீர வேண்டும் என்ற ஆசை அளவுக்கு மீறியது. ஜோக்கர் சிந்தித்துப் பார்த்தான். அது நாள் வரை சேர்த்து வைத்த இருநூறு ரூபாயை எடுத்துக் கொண்டு பட்டணம் நோக்கிப் புறப்பட்டு விட்டான் ரயிலில்!

காலை மணி எட்டு இருக்கும். திருவனந்தபுரம் துரித ரயில் எழும்பூர் ஸ்டேஷனில் வந்து நின்றது. வண்டியை விட்டு இறங்கிய ஜோக்கரிடம் வேகமாக ஒருவன் வந்து, "சார், நீங்க சினிமாவுல நடிக்கணுமா?" என்று கேட்டான்.

சென்னை ரயில் நிலைய வாசலில் சினிமா டைரக்டர்கள் காத்திருந்து நம்மை அழைத்துப் போய் நடிக்க வைப்பார்கள் என்று சிலபேர் எண்ணுவது மெய்யாகத்தானே இருக்கிறது என்று நினைத்தபடியே "நீங்க யாரு ஸார்?" என்று பதிலுக்குக் கேட்டான் ஜோக்கர்!

"நானு! ராணி பிலிம்ஸ் அஸிஸ்டெண்ட் டைரக்டர், சமீபத்தில் விளம்பரம் செய்திருந்தோமே! நீங்க கூட படிச்சிருப்பீங்களே" என்றான் மூச்சு விடாமல்.

"யோவ்! இரவு ராணி பிலிம்ஸ் நடத்துறீங்களா" ஏய்யா நான் என்ன இளிச்சவாயன்னு நெனச்சே! பிலிம்சாம், டைரக்டராம்! ஏய்யா உன்னைப் போல எத்தனை டைரக்டரை வச்சு வேலைவாங்கியிருக்கிறேன் தெரியுமா?" என்று ஜோக்கர் அலட்சியமாகச் சொன்னதும் வந்தவன்— போன திசை தெரியாமல் மறைந்து விட்டான்!

கோடம்பாக்கத்தில் தனக்குத் தெரிந்த நண்பன் வீட்டில் பெட்டியை வைத்து விட்டு ஸ்டுடியோ நோக்கிப் புறப்பட்டான் ஜோக்கர்! கழுத்தில் காமராவும் உடம்புக்குப் பற்றாத இறுக்கமான பேண்ட்டும் சர்ட்டும் அணிந்து கொண்டு கோமாளி போல இருந்த அவனைப் பார்த்து எதிரே வந்து கொண்டிருந்த பெண்கள் சிரித்தார்கள்!

உடனே ஜோக்கர் "ஏன் சிரித்தாய் என்னைப் பார்த்து — உன் எழிலுனைப் பாடவா மலரைச் சேர்த்து" என்று பாட்டுப் பாடத் துவங்கி விட்டான். அந்தப் பெண்களில் ஒருத்தி மிகவும் துடுக்குக்காரி, ஜோக்கரைப் பார்த்து "இன்னுயா உடம்பு எப்படி கீது?" என்று மதருஸ் தமிழிலே கேட்டாள்.

"எப்பட கீதா? நீ தனியா வந்தின்னு சொல்லுவேன்" என்றான் ஜோக்கர்.

"என்னாது? தனியா வரவா? ஏய்யா இன்னு நினைச்சுக்கினு என்னைத் தனியா கூப்பிடுறே...ம்" என்று சீறி விழுந்த பெண்ணைப் பார்த்து,

"அம்மா தாயே! நான் ஒண்ணும் தப்பாச் சொல்லலே. நீங்க அஞ்சாறு பொம்பளைங்க கூடிக்கிட்டு என்னைக் கேள்வி கேட்காதீங்க! தனித் தனியா கேளுங்க சொல்றேன்னு சொன்னேன். அவ்வளவுதாம்மா" என்று சொல்லி விட்டு நடக்க ஆரம்பித்தான்.

ஜோக்கர். ஒரு ஸ்டுடியோ வாசலில் ஏராளமாகக் கூட்டம் கூடி இருந்தது. ஜோக்கர் அங்கே போய் கூட்டத்தோடு கூட்டமாகச் சேர்ந்து கொண்டு என்ன நடக்கிறது என்று கவனித்தான்!

ஸ்டுடியோவிற்குள் இருந்து கார்கள் வெளியே போயின. வெளியிலிருந்து உள்ளே வேறு ஆள் இல்லாமல் டிரைவர் மட்டுமே ஓட்டிச் சென்ற வண்டிகளை யாரும் மறிக்கவில்லை! மற்றப்படி காரில் ஏதாவது ஒரு புடவை தெரிந்தாலும் "அதோ சரோஜாதேவி வர்ரு, இதோ வரப்போறது தேவிகா" என்று கூச்சல் போட்டுக் கொண்டிருந்தது அந்தக் கூட்டம்! கூட்டத்தோடு கூட்டமாக ஜோக்கரும் கூச்சல் போட ஆரம்பித்தான்! வாசலில் நின்று கொண்டிருந்த கூர்க்கா கூட்டத்தை விரட்டிக் கொண்டு இருந்தான்.

"ஏய்யா கூர்க்கா விரட்டுறே! வெளியூருல இருந்து வந்தவங்க நாங்க. நடிக நடிகையருன்னு கடவுளைப் பார்த்த மாதிரி இருக்கு! திரையிலே நிழல்ல பார்த்தே மயங்குற சில ஆட்கள் நேருல பார்த்துட்டுப் போக வந்திருக்காங்க. உனக்கு என்ன, இதெல்லாம் சர்வ சாதாரணம்தானே" என்றான் ஜோக்கர்.

"ஆமாய்யா ஆமா, நீங்க சொல்றதுதான் சரி. எங்க வீட்டுப் பிள்ளை படத்துல எம்ஜி. கூட அபாரமா சரோஜா தேவி நடிச்சிருக்காங்க! அவுங்களைப் பார்த்துட்டு போகணும்னு இதே ஸ்டுடியோ வாசல்லே நாலு நாளா காத்துக் கிட்டிருக்கேய்யா" என்றான் கூட்டத்திலிருந்த ஒருவன்!

"அடடா! உன் கேஸ் ரொம்ப அனுதாபத்திற்குரியது. இதே ஸ்டுடியோவிற்கு நாலு வாசல்
இதுதான் வாசல்
நீ இங்கேயே
உன் ஆயுசுபூரா
அம்மாளைச் ச
யாது!" என்
சிரித்துக்கொண்

"ஆ! அப்படி
அந்த அம்மா எ
வருவாங்கன்னு
என்று கேட்ட
ரசிகன்.

"அட நீ என்
கிட்டே இதைப்
குறியே, நான் எ
ளுக்குப் பெர்சன
ரியா?" என்று
கரைப் பார்த்து,
நீங்கதான்
களா?" என்று
ரசிகன்.

"அட ஆண்ட
ருட்டியுமில்லே, ந
னைப் போலத்தா
சொல்லி விட்
நுழையச் ச
எதிர்பார்த்துக்
ஜோக்கர்,
உள்ளே நுழைந்த
மறு பக்கத்தி
கொண்டு ஸ்டு
நுழைந்து விட்டா

ஸ்டுடியோவுக்கு
ஏராளமான க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ால்

ன்

நிர்வாண அழகி ஒருத்தியை மொடலாகக் கொண்டு படம் வரையும் இந்தக் கன்னியின் பெயர் போலின் தெஸ்ட். ஆஸ்திரேலியாவில் நவீன மோஸ்தர் அழகியாக போலின் விளங்குகிருள்.

இந்தப் போலினுக்கு தொழில் என்னதெரியுமா? ஓவியர்கள் படம் வரையும் போது அவர்கள் முன்னிலையில் நிர்வாணமாகக் காட்சியளிப்பதுதான்!



# அம்மண முகாம்களின் அதிசயப் போக்கு!

லாஸ்ஏஞ்சல்ஸ்,

அம்மண முகாம்களில் நாள் முழுவதும் படுத்துக்கிடந்த பிறகு சிலருக்குத் தங்கள் பால் தங்கள் துணைவன் அல்லது துணைவிக்கு காம இச்சையை உண்டாகச் செய்ய வேண்டுமானல் அது ஆடைகளை அணிந்து கொண்டால்தான் முடிகிறது.

சில மனைவிமார்கள் தங்கள் கணவன்மார்களுடன் அம்மண முகாங்களுக்கு ஏன் வருகிறார்கள் என்ருல் தங்களுடன் கணவன்மார்கள் வாரம் ஒருமுறை நிர்துருட்டும் அரங்கிற்கு வருவதற்குப் பதில் சலுகையாக வருகிருர்கள்.

அமெரிக்காவிலுள்ள அம்மண மன்றங்கள், முகாம்கள் பற்றி நடத்திய ஆய்வில் இவ்விவரங்கள் தெரிய வந்துள்ளன. கலிபோர்னியா மாநிலக் கல்லூரியைச் சேர்ந்த இரண்டு ஆராய்ச்சியாளர்கள் "அம்மண சமூகம்" என்ற பெயரிலான இந்த ஆராய்ச்சியை நடத்தினர்.

முன்பெல்லாம் அம்மண முகாம்களில் மதுபானம் அருந்தக்கூடாது! ஆணும் பெண்ணும் கைகோர்த்துச் செல்வதோ ஒருவர் மற்றவரது முதுகில் தட்டுவதோ கூடாது என்றும் தடை விதிக்கப்பட்டிருந்தது. ஆனல் இந்த விதிகளெல்லாம் இப்பொழுது விரைந்து குழி தோண்டிப் புதைக்கப்படுகின்றன என்று டாக்டர் ஹார்ட்மன் கூறுகிருர்.

அம்மணமாகத் திரிய வேட்கை கொண்டு வருபவர்களில் பெரும்பாலானவர்கள் அமெரிக்க சமுதாயத்தின் புத்திப் போக்குடையவர்கள் பெண்களைக் காட்டிலும் ஆண்களிடையே அதிகமாக உள்ளனர்.

ஆயினும் அம்மணப் பழக்கம் இனக்கவர்ச்சி பற்றிய மனச்சலனம் ஆவல் ஆகியவற்றில் பெரும் பகுதியை ஒழித்துக் கட்டி ஓய்வு, நிம்மதி, பொழுது போக்கு என்ற அம்சங்களுக்கு அடிப்படை முக்கியத்துவம் அளித்து வருகிறது.

அம்மணப் பழக்கத்தை மேற்கொண்டவர்களில் 25 பேருக்கு உடலுறவு வேட்கை அதிகமாக அடிக்கடி ஏற்படுகிறதென்றும், இந்தப் பழக்கமானது பெண்களுக்குள்ள கிராக்கியையும் அவர்களுடைய அந்தஸ்தையும் வெகுவேகமாக உயர்த்தி விடுகிறது என்று அவர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

மூன்று விழுக்காட்டினர் தாங்கள் இந்த அம்மணப் பழக்கத்தின் விளைவாக அடிக்கடி இந்த மனைவி பரிமாற்றத்தைச் செய்து கொள்வதாக கூறுகிருர்கள். 13 விழுக்காட்டினர் இதனை எப்பொழுதாவது செய்கிருர்கள். 60 விழுக்காட்டினர் அம்மணப் பழக்கத்தின் காரணமாக அப்படி ஏதும் ஆள் மாற்றத்தைச் செய்து கொள்வதில்லை.

## பழக்கம் அதிகமானதும் ஆடைகள் அணிந்துதான் காம இச்சையை உண்டாக்க முடிகின்றதாம்

இவர்கள் சுமார் 2,600 அம்மண நபர்களைப் பேட்டி கண்டனர்; நாட்டிலுள்ள சுமார் 150 அம்மண மன்றங்களில் ஏராளமான வற்றிற்குச் சென்றனர்; சில சமயங்களில் அவர்கள் தாங்களும் அம்மணமாகவே இந்த இடங்களுக்கெல்லாம் செல்ல வேண்டி நேர்ந்தது. அம்மண வேட்கை கொஞ்சங் கொஞ்சமாக அதிகரித்து வருகிறதென்றும் கடந்த ஐந்து ஆண்டுகளில் அதன் தன்மை "முற்றாக மாறிவிட்டது" என்றும் அந்த ஆராய்ச்சியாளர்களில் ஒருவரான டாக்டர் ஹார்ட்மன் கூறினர்.

மேட்டுக்குடி வகுப்பினராகவே இருக்கிருர்கள் என்று ஆய்விலிருந்து கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. 85 விழுக்காட்டினர் உயர்நிலைப் பள்ளிப், பட்டதாரிகள். 20 விழுக்காட்டினர் கல்லூரிப் பட்டதாரிகள் அல்லது மேற்பட்டத்திற்குப் பயிலும் மாணவர்கள்.

75 விழுக்காட்டினர் மணமானவர்கள்; அடிக்கடி ஊர்விட்டு ஊர் மாருமல் கிட்டத்தட்ட ஒரே ஊரில் வசிப்பவர்கள்.

அம்மணப் பெண்களில் பலர் சாதாரணமான இதர எந்த அமெரிக்கப் பெண்களையும் போல மனநிலை ஒழுங்கானவர்களாகவே இருக்கிருர்கள். ஆனல் ஆண் அம்மணர்கள் அப்படி அல்ல. ஏதாவது சலன 32 விழுக்காட்டினருக்கு எந்த மாற்றமும் இல்லை என்றும், நான்கு விழுக்காட்டினருக்கு அது குறைந்து விட்டது என்றும் மற்ற ஆராய்ச்சியாளரான திருமதி பீதியன் கூறுகிருர்.

அவர் பேட்டி கண்டவர்களில் 11 பேர் கணவன் அல்லது மனைவி தவிர மேற்கொண்டும் யாருடனவது உடலுறவு கொள்ள விரும்புகிருர்கள். 32 விழுக்காட்டினரைப் பொறுத்தவரையில் மாற்றமில்லை, 8 விழுக்காட்டினர் சம்சார வாழ்க்கைக்கே தலை முழுக விரும்புகிருர்கள்.

மனைவியரைப் பரிமாறிக் கொள்ளும் புது மோகம் பற்றியும் இவர்கள் ஆராய்ந்திருக்கிருர்கள்.

சில அம்மண முகாம்களில் அவிழ்த்துப் போட விரும்பாதவர்கள் ஆடையுடனேயே இருக்கலாம் என்ற விதி இருந்த போதிலும் சாதாரணமாக அந்த முகாம்களுக்குள் போய் விட்டால் அவிழ்க்காதவர்களை அவிழ்க்கும்படி அங்குள்ள அம்மணர்கள் வற்புறுத்துவது வழக்கமாகி விட்டது. பலர் "சரி என்ன கெட்டுப்போய் விட்டது?" என்று அவிழ்த்துப் போட்டு விடுகிருர்கள். சிலர் பிடிவாதமாக கடைசிவரை ஆடையால் முடிய உடலுடனேயே நேரத்தைப் போக்கி விட்டுத் திரும்பி விடுகிருர்கள்.

## — ஒரு ஹாஸ்யச் சித்திரம்

இருக்குய்யா!
...ல்னு நெனச்சு
... காத்திருந்தா
...வும் நீ அந்த
... சந்திக்க முடி
...ருன் ஜோக்கர்
...டே!
...டியா? ஏய்யா
... எந்த வழியா
... தெரியுமா?"
...டான் அந்த

...ன்னய்யா எங்
... போயிக் கேக்
...ன்னு அவுங்க
...னல் செக்ரட்ட
... கேட்ட ஜோக்
...து, "என்னங்க
... செக்குருட்டிங்
... கேட்டான்

...டவனே! செக்கு
... நானும் உன்
...ன்னே" என்று
...ட்டு உள்ளே
... சந்தர்ப்பத்தை
... கொண்டிருந்த
... வெளியிலிருந்து
...து ஜீப் ஒன்றின்
...தில் தொத்திக்
...டுடியோவுக்குள்
...ான்.
...க்குள் இருந்த
... காகிதப் பூக்

களைக் கண்டு, "அடேயப்பா! இங்கே ஒரு பெரிய மலர் வனமே இருக்குதே! ஏய்யா இந்தப் பூவை யாரும் பறிக்க மாட்டாங்களா?" என்று கேட்டான் பக்கத்தில் நின்று கொண்டிருந்த லைட் போய் ஒருவனைப் பார்த்து!

"யோவ்! நீ இன்ன மனுசய்யா இதைப் போயி பூவான்னு கேக்குறியா! உனக்கு மண்டையிலே ஏதாச்சும் இருக்குதாய்யா?" என்று கேட்ட லைட் போயிடம், "ஏய்யா இல்லே! ஏராளமாய் இருக்குதே தலைமுடி" என்ருன் சிரிக்காமலேயே.

லைட்போய்க்கு அவனது அப்பாவித்தனம் மிகவும் பிடித்து விட்டது. ஆகவே அவன் ஜோக்கரிடம், "யோவ் நீ யாரைப் பார்க்க உள்ளே வந்தே?" என்று கேட்டான்.

"நான் யாரையும் பார்க்க வரலேப்பா. சினிமாவுல ஏதாவது வேஷம் நடிக்கணும்னு தான் வந்தேன்" என்ருன் ஜோக்கர்.

லைட்போய் அவனை டைரக்டர் டாம்டாம் என்பவரிடம் அழைத்துப் போய் ஏதாவது வாய்ப்புத் தரும்படி சிபார்சு செய்தான். டைரக்டர் அவனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "ஏம்பா நீ இதுக்கு முன்னடி எத்தனை படங்களில் நடிச்சிருக்கே?" என்று கேட்டார்.

"படத்துல நடிச்சிருந்தா நான் ஏன் சார் லைட்போய் சிபாரிசை மதிக்கணும்?" என்று பதிலுக்குக் கேட்டான் ஜோக்கர்!

"அப்போ நாடக அனுபவம் ஏதாவது......?"

"ஓ... ஏராளமா இருக்கு! "தலை மாறிய பிணம்", "டைரக்டரின் கள்ளக் காதல்", "ஹலோ மிஸ்டர் கண்டக்டர்" இப்படிப் பல நாடகங்களில் நடிச்சிருக்கேன்" என்ருன் ஜோக்கர்.

"அடேடே! நல்லா வேடிக்கையாப் பேசுறியே. இந்தாப்பா நீ நம்மப் படத்துல நடிக்கலாம். உனக்கு மேக்குப் டெஸ்ட் இரண்டு நாள்ல கிடைக்கும்."

"அதுவரை நான் உயிரோட இருக்கணுமே சார்! தயவு செய்து இன்னிக்கே எல்லா டெஸ்டையும் முடிச்சுப் படத்தையும் எடுத்துப் பார்த்திடுங்களேன்" என்று கெஞ்சினன் ஜோக்கர்.

"இதோபாரு நான்சொன்ன சொன்னதுதான். ம்.., புறப்படு. இரண்டு நாள் கழிச்சு வா" என்று கூறி விட்டு அடுத்த அறைக்குள் நுழைந்தார் டைரக்டர் டாம்டாம்!

ஜோக்கருக்கு எல்லையில்லாத சந்தோஷம். அருகில் இருந்த மேக்கப் ரூமில் போய் அங்கிருந்த மேக்கப் பவுடரை எடுத்து முகத்தில் அப்பிக் கொண்டு ஸ்டுடியோவை விட்டு வெளியே வந்தான்.

வெளியில் நின்று கொண்டிருந்த சிலர், "சார்... சார், நீங்க எந்தப் படத்துல சார் நடிச்சிங்க?" என்று கேட்டதும், "இந்தாப்பா, ஏன் மேலே வந்து விழுறிங்க! உங்களோட ஒரே தொல்லையாப் போச்சு. வழியை விடுங்கப்பா...... அடுத்த சூட்டிங்குக்குப் போகணும்" என்ருன் ஜோக்கர் அலட்சியமாக!

கூட்டம் "ஊய்......ஊய்" என்று விசிலடித்துக் கொண்டு ஜோக்கரை விரட்ட ஆரம்பித்தது. ஜோக்கரும் ரசிகர்கள் கூட்டத்திற்குப் பயந்தவனக மின்னல் வேகத்தில் ஓடி ரோட்டில் நின்று கொண்டிருந்த குதிரை வண்டியில் ஏறி குதிரையைக் தட்டிவிட்டான்.

குதிரை ஓட ஆரம்பித்தது. வண்டியை இன்னும் வேகமாக ஓட்டினன் ஜோக்கர். எதிரே டைரக்டர் வந்து, "வண்டியை நிறுத்து, நிறுத்து" என்று கூச்சல் போட்டார். வண்டி நிற்கவில்லை. சுற்றிச் சுற்றி ஓட ஆரம்பித்தது. ஸ்டுடியோவில் உள்ள அனைவரும் சுற்றி நின்ருர்கள். வண்டிக்குச் சொந்தக்காரன் வந்து லாவகமாக வண்டியில் பாய்ந்து வண்டியை நிறுத்தினன்!

"அடடா... ஏம்பா வண்டியை நிறுத்தினே? இந்த ரசிகர்கள் தொல்லை பொறுக்கல்லே" என்ருன் ஜோக்கர்.

டைரக்டர் டாம்டாமிற்கு ஒரே கோபம்! லைட்போயைக் கூப்பிட்டு, "முதலில் இந்தப் பைத்தியத்தை கீழ்ப்பாக்கத்தில் கொண்டு போய் அட்மிட் செய்துவிட்டு வா" என்ருர்.

தன்னைப் பைத்தியம் என்று சொன்ன பிறகுதான் - ஸ்டுடியோவில் சூட்டிங்கிற்காக கொண்டு வரப்பட்ட வண்டியில் ஏறி அமர்க்களம் செய்த விபரம் ஜோக்கருக்குப் புரிந்தது. டைரக்டரிடம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். யாரும் கேட்பதாக இல்லை! நான்கு பேர் சேர்ந்து ஜோக்கரை அலாக்காகத் தூக்கிக் கொண்டு போய் அம்புலன்ஸ் காரில் தள்ளினர்கள்.

படத்தில் நடிப்பதற்குள்ளாகவே மிகப் பெரிய நடிகனைகத் தன்னைத் தானே நினைத்துக் கொண்டு, குதிரை வண்டியில் மின்னல் வேகப் பிரயாணம் செய்த ஜோக்கர், அம்புலன்ஸ் காரில் இருந்து வலை போட்ட ஜன்னல் வழியாக, ரோட்டில் போய்க் கொண்டிருந்த ஆட்களுக்கெல்லாம் "டாடா" சொன்னன் மிகப் பெரிய கதாநாயகனைப் போல......"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரு வருடத்தில் உருகுவேயில் 3-வது சம்பவம்

# ஆயுதம் தரித்த கோஷ்டி நீதிபதியைக் கடத்தியது

உருகுவே, ஜூலை 30

ஆயுதம் தரித்த கோஷ்டி ஒன்று நீதிபதி ஒருவரின் வீட்டை உடைத்தது - பின்னர் நீதிபதியைக் கடத்திக் கொண்டு களவாடப்பட்ட இரு கார்களில் கம்பி நீட்டியது-

இந்தப் பயங்கரச் சம்பவம், அமெரிக்காவில் உள்ள உருகுவே நாட்டில் இடம்பெற்றது.

டானியல் பெரேரா மானெல்லி என்பது அந்த நீதிபதியின் பெயர்.

அவர் கடத்தப்பட்ட நாட்களில் கெரில்லாக்கள் சம்பந்தப்பட்ட வழக்கு ஒன்று விசாரணையில் இருந்தது.

பல கெரில்லாக்களுக்கு அவர் சிறைத் தண்டனையும் விதித்திருந்தார். கடத்தல், கொள்ளை, கொலை ஆகிய பயங்கரக் குற்றங்களில், இவர்களில் பலர் சம்பந்தப்பட்டிருந்தனர்.

ஆயுதம் தரித்த கொள்ளைக் கோஷ்டி நீதிபதியைக் கடத்துவதற்கு முன்னர், நீதிபதி வீட்டுத் தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்பட்டன.

நீதிபதியை நாளைய தினமே விடுதலை செய்வதாக கொள்ளைக் கோஷ்டியைச் சேர்ந்த ஒருவன் நீதிபதியின் மனைவியிடம் கூறினன். நீதிபதி கடத்தப்படுவதற்கான காரணத்தை அவன் வெளியிடவில்லை.

கொள்ளைக் கோஷ்டியினல் கடத்திச் செல்லப்பட்ட நீதிபதியான டானியல் பெரேரா மானெல்லி இதுவரை 80 கெரில்லாக்களுக்கு சிறைத் தண்டனை விதித்துள்ளார். இன்னும் பலர்மீது விசாரணை நடைபெற்று வந்தது.

உருகுவே சிறையில் தற்பொழுது சிறை வைக்கப்பட்டுள்ள 80 கெரில்லாக்களில் 20 பேர் கெரில்லா இயக்கத்துக்கு முக்கியமானவர்கள் என்று கூறப்படுகிறது. நீதிபதியைக் கடத்திவிட்டு, 20 கெரில்லாக்களையும் விடுவிப்பதற்கு இவர்கள் அரசாங்கத்துடன் பேரம் பேசுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த இரு வருட காலத்தில் உருகுவேயில் நடைபெற்றுள்ள இரண்டாவது கடத்தல் சம்பவம் இதுவாகும்.

1968 ஆகஸ்ட் மாதம் அரசாங்க மின்சக்திக் கம்பெனியின் தலைவரான பெரேரா றிவர் பெல்லை கெரில்லாக்கள் கடத்திச் சென்றனர்.

பின்னர் ஐந்து தினங்களின் பின்னர் அவரை விடுதலை செய்தனர்.

கடந்த செப்டம்பர் மாதம் பத்திரிகை ஆசிரியரான பெல்லி கிரினர் என்பவர் கடத்திச் செல்லப்பட்டார்.

எப்படவிருக்கும் விடயங்கள் விபரங்கள் வருமாறு:—

72 தினங்களின் பின்னர் 55,000 அமெரிக்க டாலரை நன்கொடையாகப் பெற்ற பின்னர் கெரில்லாக்கள் அவரை விடுதலை செய்தனர். (5)

## வேட்டித் தலைப்பில் பணம் முடிந்து கொண்டு போனார்

சாவகச்சேரி, ஜூலை. 30

அன்று மாலை நாலுமணிக்கு என்னிடம் ரூபா 200 வாங்கி அதை வேட்டித் தலைப்பில் முடிந்து கொண்டு மாங்குளம் சென்ற எனது கணவரை பின் மாங்குளக் கமத்தில் பிரேதமாகக் கண்டேன்.

மாங்குளம் முக்கொலை வழக்கில், காலஞ்சென்ற செல்லத்துரை என்பவரின் மனைவி விசாலாட்சி, வடபகுதி அஸைஸ் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும் போது மேற்கண்டவாறு கூறினர்.

இந்த வழக்கில் 68-ம் ஆண்டு ஜூலை மாதம் 26-ம் திகதி மாங்குளத்தில் வைத்து இராமநாதன் செல்லத்துரை, பொன்னையா, பால்ராஜ் அல்லது பாலகிருஷ்ணன் ஆகிய மூவரையும் கொலை செய்ததாக வில்லியம், பியரத்ன, ஆகிய இருவர்மீதும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

வழக்கு, வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில், நீதியரசர் திரு. ஏ. எல். சிறிமானே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின்போது இறந்தவரில் ஒருவரான இராமநாதன் செல்லத்துரை என்பவரின் மனைவி விசாலாட்சி மேலும் கூறியதாவது:—

“என் கணவர் மாங்குளத்தில் உள்ள கமத்திற்குப் போகும் போது என்னிடம் ரூபா 200 வாங்கிச் சென்றார். அவரிடம் வேறும் ஏதாவது பணம் இருந்ததைப் பற்றி எனக்குத் தெரியாது.

அவர் விரலில் ஒரு தங்க மோதிரமும் அணிந்திருந்தார். எனது கணவருக்கு மாங்குளத்தில் சுமார் 40 ஏக்கர் காணியிருந்தது. மல்லாவியிலிருந்து தனது கமத்திற்கு அவர் அடிக்கடி போய் வருவார்.

“அங்குள்ள வேலைகளைக் கவனிப்பதற்கு சம்பளத்திற்கு ஆள் வைத்திருந்தார்.

அன்று வீட்டில் சாப்பிட்டு விட்டு என்னிடம் 200 ருபா வாங்கி வேட்டித் தலைப்பில் முடிந்துகொண்டு மாங்குளம் புறப்பட்டார். பின் மாங்குளத்தில் பிரேதமாகவே கண்டேன். (51)

## ரயிலில் பிரயாணம் செய்து பிடிபட்டு ரூ. 200 பிணையில்

நாவலப்பிட்டி, ஜூலை. 30

கினிகத்தேனை அரசினர் பாடசாலை ஆசிரியர் ஒருவர் தம்மகளுடன் நுவரெலியாவில் நடைபெற்ற தமிழ்த்திறன் போட்டியில் பங்குபற்ற நாவலப்பிட்டியிலிருந்து ரயில் மூலம் நானுஓயாவிற்கு செல்ல ரயில்வே வாரண்ட் மூலம் டிக்கட் பெற்றார்.

வாரண்ட் சிங்களத்தில் எழுதப்பட்டிருந்தது. சிங்களம் தெரியாத அவ்வாசிரியர் பெற்ற இரு டிக்கட்டிலும், பின்புறம் பெண் என்று சீலிடப்பட்டிருந்ததாம்.

பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது ரயில் பரிசோதகரிடம் பிடிப்பட்ட அவ்வாசிரியர் கள்ளடிக்கட்டில் வந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு 200/- ரூபா பிணையில் விடப்பட்டாராம்.

அரசகரும மொழி தெரியாத தனக்கு ஏற்பட்ட அவமானத்தினைக் குறித்து நாவலப்பிட்டி ரயில்வே காரியால கண்ட்ரோல் ஆபிஸிற்கு புகார் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார் அந்த ஆசிரியர். (215)

## அந்நிய செலாவணி சம்பாதிக்கத் திட்டம்

இலங்கையிலுள்ள அரசாங்க கூட்டுத்தாபனங்களில் உற்பத்தியாகும் பல பொருட்களை வெளிநாடுகளில் விற்று அந்நிய செலாவணி சம்பாதிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது

இவ்விஷயமாக வெளி நாட்டில் உள்ள இலங்கைத் தூதுவர்களுடன் அரசாங்கம் தொடர்பு கொண்டுள்ளது-

சுவீடனும் டென்மார்க்கும் இலங்கையின் தோல் பொருட்களையும், இஸ்ரவேலும் கிழக்கு ஜெர்மனியும் இலங்கை மட்பாண்ட பொருட்களையும் விலை கொடுத்து வாங்க ஏற்கனவே விருப்பம் தெரிவித்துள்ளன.

தோல் பொருள் விற்பனையில் வருடாந்தம் மூன்று கோடி ரூபாவும் மட்பாண்ட விற்பனையில் வருடாந்தம் ஒன்பது கோடி ரூபாவும் அந்நிய செலாவணி சம்பாதிக்க முடியுமென கூறப்படுகிறது-

தற்போது தோல் பொருட்கள் ஏற்றுமதியால் ரஷ்யாவிலிருந்து சுமார் ஒரு கோடி ரூபா அந்நிய செலாவணி சம்பாதிக்கப்படுகிறது. (ல)

## தந்திரமாக அனுப்புகின்றனர்

உடுநுவர, ஜூலை. 30

புதிய வீட்டு வாடகைச் சட்டம் அமுல் நடத்தப்படுவதற்கு முன்பதாக வாடகை வீடுகளில் வசிப்பவர்கள் பலரை, பேராதனை, கண்டி ஆகிய பகுதிகளில் உள்ள வீட்டுச் சொந்தக்காரர்கள் தந்திரமாக வெளியேற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறது. (312)


## எல்லா வீடுகளுக்கும் ஒரு வைத்தியர்!

உங்களுக்கு எந்தவிதமான ஒரு நோய் ஏற்பட்டாலும் ஒரு தட்வை சித்தாலேப்ப வை பாவித்துப் பாருங்கள்.

உங்கள் வலியுள்ள இடத்தையடைந்து அதை குணப்படுத்தும். இதை தடவுவதால் உடலின் உள்ளேயும், மேலிலும் ஒரே விதமாக குணம் கிடைக்கும். பாவிக்கும் முறைகள் பெட்டிக்குள் இருக்கின்றது.

ஒரு பெட்டியின் விலை ரூ. 2-50
ஒரு சிறிய சீசாவின் விலை ரூ. 1-00

குண்டிக்காய் ரோக நிபுணரான மஹந்திரிக்க சில்வா ஹெட்டிகொட அவர்களால் தயாரிக்கப்பட்ட

சித்தாலேப்ப



விநியோகஸ்தர்கள்:-

**பேர்ஸி டிரேடிங் கொம்பனி**

185, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டத்துகாதல் உறவு நீதிமன்றத்தில் அம்பலம்

## மாதம் 20 ரூபா கட்டும்படி எதிர்மனுதாரருக்கு உத்தரவு

கண்டி, ஜூலை 30

"நான் இரு தடவை திருமணம் செய்திருந்தேன். இரு கணவர்களும் இறந்து விட்டனர். திருமணங்கள் மூலம் இரு கணவர்களுக்கும் இரு குழந்தைகள் உள்ளனர்."

கண்டி நீதிபதி திரு. எம். பி. ஜி. பெர்னாண்டோ முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட தாபரிப்பு வழக்கு ஒன்றில் தோட்டத் தொழிலாளியான பெண் ஒருத்தி மேற்கண்டவாறு சாட்சியம் அளித்தார்.

இந்த வழக்கில் கலஹா அம்பலவாணர் தோட்டத்தைச் சேர்ந்த எம். காமாட்சி (35) என்ற பெண் மனுதாரர்.

அதே தோட்டத்தைச் சேர்ந்த ஆர். இராமசாமி என்பவரிடம் இருந்து தாபரிப்புக் கோரி இந்த வழக்கைத் தொடர்ந்திருந்தார்.

மனுதாரப் பெண்ணான காமாட்சி சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது, "இரண்டாவது கணவர் இறந்த பின்னர் நான் எனது பெற்றோருடன் சென்று வசித்து வந்தேன். அம்பலவாணர் தோட்டத்தில் கங்காணியாகக் கடமையாற்றிய எதிர்மனுதாரரின் கீழ் வேலை செய்து வந்தேன். எதிர்மனுதார் ஏற்கனவே திருமணமானவர். அவருக்கு இரு குழந்தைகள் உள்ளனர்.

"எதிர் மனுதாரர் என்னுடன் நெருங்கிப் பழக ஆரம்பித்தார். என்னைத் திருமணம் செய்வதாகக் கூறி கணவன் — மனைவிபோல நடந்துகொண்டார்.

"எதிர்மனுதாரரின் மனைவிக்கும், தோட்டத்தில் உள்ள பலருக்கும் இந்த உறவுகள் பற்றித் தெரியும்.

"குழந்தை பிறந்தபோது அதைக் கவனிப்பதாக எதிர் மனுதாரர் கூறியிருந்தார். ஆனால் அதன்பின்னர் அவர் கவனிக்கவில்லை.

"குழந்தை பத்தியகம ஆஸ்பத்திரியில் பிறந்தது. பத்தியகம ஆஸ்பத்திரிக்குப் போவதற்கு முன்னர் தோட்டத்தில் உள்ள டிஸ்பென்சரிக்கு சிகிச்சைக்காகச் சென்றேன். குழந்தைக்குத் தகப்பனர் யார் என்று டாக்டர் கேட்டார். அப்பொழுது எதிர்மனுதாரரின் பெயரைச் சொன்னேன்.

"அப்பொழுது எதிர்மனுதாரரை அழைத்து வரும்படி டாக்டர் சொன்னர். இதுபற்றி எதிர் மனுதாரரிடம் வந்து நான் சொன்னபோது அவர் என்னைத் திட்டினர்.

"இதன்பின்னர் உதவி சுப்பிரின்டனுக்கு முறைப்பாடு செய்தேன்." இவ்வாறு சாட்சி கூறினர்.

விசாரணை முடிவில் மனுதாரரின் குழந்தைக்கு மாதம் 20 ரூபா தாபரிப்புப் பணமாகச் செலுத்தும்படி நீதிபதி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட்டார். (5)

## ஏன் இந்த மயக்கம்

நிந்தவூர் ஜூலை 30

வெளியூர்களிலிருந்து நிந்தவூரை வந்தடையும் கடிதங்கள் சில சமயம் நயினதீவு துபாற் கந்தோரைத் தரிசித்துவிட்டே இங்கு வருவதாகப் பொதுமக்கள் புகார் கூறுகின்றனர்.

இதனல் குறிப்பிட்ட கால எல்லைக்குள் கிடைக்க வேண்டிய கடிதங்கள் காலதாமதம் அடைவதால், சிரமங்களையும், கஷ்டங்களையும் பொதுமக்கள் அனுபவிக்க வேண்டியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. (217)

## தந்தையின் புத்திமதியால் தனயன் உயிர் பறந்தது

"மகனே உன் கெட்ட கூட்டத்தை விட்டுவிடு" என தந்தை கூறிய புத்திமதியைத் தாங்கமாட்டாத தனயன் நச்சுத் திராவகம் அருந்தி உயிரை மாய்த்தான்.

அப்புத்தளை "பிளக்வூட்" தோட்டத்தைச் சேர்ந்த பழனியாண்டி என்ற 17 வயது வாலிபரே தற்கொலை செய்துகொண்டவராவார்.

தியத்தலாவைத் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. ஆர். எ. யோசேப் பெரேரா ஸ்தலத்தில் மரண விசாரணை நடாத்தினர்.

அவர் முன் சாட்சியமளித்த இறந்தவரின் தந்தையான எம். முலாயன் [42] கூறியதாவது:—

"எனது மகன் பழனியாண்டி கூடாத வாலிபர்களுடன் சேர்ந்து விளையாடுவார். நான் இந்த நட்பை விட்டுவிடும்படி அவருக்கு அடிக்கடி புத்திமதி கூறிவந்தேன்.

"சம்பவம் நடந்த தினம், நானும் மனைவியும் வேலைக்குச் சென்றுவிட்டோம். மகன் பழனியாண்டியும், எனது மகள் சிவபாக்கியமும் வீட்டில் இருந்தார்கள்.

"அரை மணித்தியாலத்தின் பின்னர் மகள் சிவபாக்கியம் ஓடி வந்து பழனியாண்டி எதையோ குடித்ததால் வாந்தி எடுத்துக் கொண்டிருப்பதாகத் தெரிவித்தார்.

"உடனே நான் சென்று அவரை அப்புத்தளை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றேன். அங்கு அனுமதிக்கப்பட்டு ஏழு மணித்தியாலங்களின்பின் அவர் இறந்துவிட்டார்."

இறந்தவரின் இளைய சகோதரியான 12 வயதான சிவபாக்கியத்தின் சாட்சியமும் பதிவு செய்யப்பட்டது. இறுதியாக மரண விசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (- 7)

## கள்ளமாக படம் பார்த்து கணவனிடம் அடி வாங்கினர்

காத்தான்குடி, ஜூலை 30

மட்டுநகர் படமாளிகை ஒன்றில் கணவனும் மனைவியும் கடும் சமர் புரிந்தனர்.

இதுபற்றிக் கூறப்படுவதாவது, கணவன் தன் கடமைக்குச் சென்றதும் கணவனுக்குத் தெரியாமல் மனைவி மெட்னி காட்சிக்கு சென்றுவிட்டாள்.

கணவன் வேலை செய்து களைத்து விட்டு தன் அன்பு மனைவியைக் காண ஓடோடி வந்தான். ஆனல் வீடு பூட்டப்பட்டிருப்பதைக் கண்ட கணவன் அயலவர்களிடம் விசாரித்துப் பார்த்தான். துப்புத் துலங்கவில்லை.

உடன் படமாளிகைப் பக்கம் சென்று மனைவியைப் பற்றி நண்பர்களிடம் விசாரித்தான். மனைவி படம் பார்ப்பதாகத் தகவல் கிடைத்ததும் உடன் தடி ஒன்றை எடுத்து மறைத்து வைத்துக் கொண்டு படமாளிகைக்குள் போனன்.

நிர்வாகியிடம் தன் மனைவியைக் காண வேண்டுமென்று அனுமதி எடுத்துக் கொண்டு உள்ளே சென்றன்.

படத்தில் வரும் ஹாஸ்ய விருந்துகளை பார்த்து தன்னை மறந்து ரசித்துக் கொண்டிருந்த மனைவியை அதிகாரத் தொனியுடன் அழைத்தான்.

மனைவி, கணவனின் அழைப்பை அலட்சியம் செய்து கொண்டிருந்தாள்.

மறைத்து வைத்திருந்த தடியால் மனைவியைப் பதம் பார்த்தான் அவன்.

தாக்குதலைச் சமாளித்துக் கொண்ட மனைவி படம் முடிந்ததும்தான் வெளியில் வருவேன் என்று கூறி தனது டம்பப் பையை திறந்து "இந்தா திறப்பு" என்று முகத்தில் வீசினளாம்.

ஆத்திரம் கொண்ட கணவன் மீண்டும் தாக்கவே படமாளிகை நிர்வாகத்தின் தலையீட்டின்பேரில் கணவன் வெளியேற்றப்பட்டான். (135)

## வலைத் திருட்டு வழக்கில் எதிரி குற்றவாளியானர்

சாவகச்சேரி, ஜூலை 30

சிறகு வலைத் திருட்டில் எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட நீதவான். எதிரிக்கு ரூபா 300 அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

தச்சன் தோப்பைச் சேர்ந்த பாலசிங்கம் என்பவருடைய வலையைத் திருடியதாக அதே ஊரைச் சேர்ந்த ஆர். சந்திரசேகரம் என்பவர் மீது குற்றம் சாட்டி சாவகச்சேரிப் பொலீசாரால் தொடரப்பட்ட வழக்கை சாவகச்சேரி நீதவான் திரு. கே. விக்னராஜா விசாரணை செய்து தீர்ப்பளித்தார்.

எதிரி மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டிருப்பதாகவும், எதிரிக்கு ரூபா 300 அபராதம் செலுத்தும்படியும், அபராதத்தை செலுத்தத் தவறும் பட்சத்தில் மூன்று மாதம் சிறைத் தண்டனை அனுபவிக்கும்படியும் கூறித் தீர்ப்பளித்தார். (51)

## பொது மண்டபம் இல்லாத குறை

நிந்தவூர் ஜூலை 30

நிந்தவூர்க் கிராமத்தில் பொது மண்டபமொன்று இல்லாது இருந்து வரும் குறை குறித்து பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

இக்குறையை நீக்க கிராமசபை முன்வர வேண்டுமெனப் பொது மக்கள் கோருகின்றனர். (217)


### மின்னுவதெல்லாம் பொன்னல்ல!

உங்கள் பிரச்சினை எதுவானலும் சரி, உங்கள் வாழ்க்கை மறுமலர்ச்சியடைந்து, வியாபாரத்தில் லாபம் பெற்று, தொழிலில் உயர்வடைந்து, வாழ்க்கையில் வெற்றியடைந்து குடும்பத்தின் தொல்லை நீங்கி வாழ்நாள் எல்லாம் இன்புற்று வாழ தினமும் காலையிலும், மாலையிலும் உங்கள் வீட்டிலோ கடையிலோ

**ஸ்ரீ ராம வாசனைப் புகையை**

தவறாது பாவித்து பலன் அடையுங்கள்.

ஒரு மாத பாவனைக்கு ரூ. 3-25
மூன்று மாத பாவனைக்கு ரூ. 7-50

வி- பி- பி- ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பரீட்சை, பந்தயம், வழக்கு மற்றும் செல்லும் இடமெல்லாம் வெற்றியை தரவல்லது.

**ஸ்ரீ சரஸ்வதி இராச யந்திரம்**

(விலை ரூ. 15/50 மட்டுமே)

வேறு எந்த காரணமாயிருந்தாலும் முழு விபரங்களையும் எமக்கு எழுதி தவறாத நிவர்த்தியைப் பெறுங்கள். வசியம் சம்பந்தப்பட்ட விஷயங்கள் விசேஷமாக கவனிக்கப்படும். காதலில் வெற்றி, பெற்றோரின் விருப்பம், நிச்சயமாக பெற்றுக் கொடுக்கப்படும். இருவர் பெயர்களுடன் இலவச விபரங்கட்கு எழுதுங்கள்.

அரசாங்க அனுமதிபெற்ற
மகா மாந்திரீகர்
**நீலன் கந்தசாமி,**
லக்ஸல கட்டிடம், நிட்டம்புவ.



### கராட்டே



இளம் காளையரே! கன்னியர்களே!! இதோ உங்களுக்கும் ஒரு சிறந்த கராட்டே வாத்தியாரினல் எழுதப்பட்ட கராட்டே பாடத் திட்டங்கள். உங்கள் உடல் மெலிந்திருப்பதாலும் சக்தி குறைந்திருக்கிறபடியாலும ஒரு எதிரியுடன் போராடுவதற்கு தயக்கம் அடைகிறீர்கள். அந்தக் கவலையைப் போக்கி, எதிரியை அடக்கக்கூடிய ஜூடோ, கராட்டே, சீனடி பயிலவேண்டும். முக்கிய ஸ்தானங்களை குறிப்பிடும் ஒரு மனித சித்திரமும் அடங்கியுள்ள நூற்றுக் கணக்கான சித்திரங்களுள்ள "கராட்டே வீரர்" என்ற முதல் பாகம் 5/- பணம் செலுத்தி பெற்றுக் கொள்வதற்கு அனுப்பி வைக்கப்படும்.

**CENTRAL SUPPLIERS,**
**PHYSICAL TRAINING ENTP;**
No. 10, De Silva Road,
Dehiwala.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவுராணிகள் தொல்லை வெகுவிரைவில் ஒழியும்

## பொலீஸ் கடும் நடவடிக்கை எடுக்கும்

கொழும்பு நகரில் அதிகரித்து வரும் இரவு ராணிகளுக்கு எதிராகப் பொலீஸ் இனிமேல் கடும் நடவடிக்கை எடுக்கும். நகரில் வேகமாகப் பரவிவரும் மேக நோயை கட்டுப்படுத்துவதே இதன் நோக்கம் ஆகும்.

பேலியகொடை, களனி ஆகிய இடங்களில் இருந்து இளம் பெண்கள் கொழும்புக்கு அழைத்துவரப்பட்டு கெட்ட நோக்கத்துக்காக உபயோகிக்கப்படுவது தற்பொழுது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வறுமையால் வாடும் இளம் பெண்களை வைத்துக் கொண்டு பலர் பெரும் லாபம் சம்பாதிப்பதாகவும், நகரில் மேகநோய் வேகமாகப் பரவி வருவதற்கு இவர்கள்தான் முக்கிய காரணமாக இருப்பதாகவும் கூறப்படுகிறது.

புறக்கோட்டை, கோட்டை ஆகிய இடங்களில் இரவு ராணிகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகப் பலர் பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

வெளியூர்களில் இருந்து ரயில் மூலம் கொழும்பு வருபவர்களை கடைக்கண் வீச்சினால் மயக்கிக் கெடுக்கும் இளம் பெண்கள் பலர் நொறிஸ் வீதியில் சதா சுற்றிக் கொண்டிருப்பதாகவும், இவர்களுக்கு நடைபாதை வியாபாரிகளின் ஆதரவு இருப்பதாகவும் கூறப்படுகிறது.

அண்மையில் நொறிஸ் வீதியில் உள்ள ஹோட்டல் ஒன்றைப் பொலீஸார் முற்றுகையிட்ட போது பல இளம் பெண்களும், ஆண்களும் பிடிபட்டனராம்.

பிடிபடும் இரவு ராணிகள் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டாலும், தண்டனை காலம் முடிய மீண்டும் வந்து தமது தொழிலை ஆரம்பித்து விடுகிறார்கள் என்று கூறப்படுகிறது. (5)

## இந்தியவம்சாவளியினரின் உரிமைகள் பற்றி பேச்சு

இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினரின் உரிமைகளைப் பாதுகாப்பது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்த தோட்டத் தொழிற் சங்கங்களுக்கும், இந்திய வம்சாவளியினர் சம்பந்தப்பட்ட முக்கிய பிரமுகர்களுக்கும், ஜ. தொ. கா. தலைவரும் நியமன எம். பி.யுமான திரு. ஏ. அஸீஸ் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

இது சம்பந்தமாக ஜ. தொ. கா. தலைவர் அஸீஸ் எம். பி. கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கை விரைவில் குடியரசாகவிருக்கிறது. இதற்கான புதிய அரசியல் அமைப்புச் சட்டங்கள் இயற்றப்படவிருக்கின்றன.

இந்திய வம்சாவளியினருக்குப் பாதுகாப்பளிப்பது சம்பந்தமாக அரசியலமைப்பு நிர்ணய சபையில் தெரிவிப்பது இன்றியமையாததாகும். 24(1) இலக்கச் சட்டம் போன்று பல இருப்பதாலேயே சிறுபான்மையினரின் உரிமைகள் பாதிக்கப்படுகின்றன.

எனவே, புதிய அரசியலமைப்புச் சட்டத்தில் இந்திய வம்சாவளியினரான சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு மிகவும் இன்றியமையாததாகும். பெரும்பான்மையோரோடு சமத்துவத்தோடும், சகோதரத்துவத்தோடும் வாழ்வதற்கு சகல இன மக்களும், அடிப்படை உரிமைகள் அனைத்தையும் பெற்று வாழ்வது அவசியமானதாகும் என்றார்.

கொழும்பிலுள்ள தேயிலைப் பிரச்சார சபையில் ஆகஸ்ட் மாதம் 2ம் திகதி காலை 10 மணிக்கு கலந்துரையாடல் நடைபெறும்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கம், லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன், தேசிய தொழிலாளர் சங்கம், இந்திய வம்சாவளியினர் பற்றிய தாபனங்கள், தனி நபர்கள் ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்து தங்கள் கருத்தினைத் தெரிவிக்க விரும்பினால் தயவுசெய்து ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ்பதில் நிர்வாகக் காரியதரிசி திரு. டி. சுந்தரராஜ் அவர்களோடு தொடர்பு கொள்ளுமாறு ஜ. தொ. கா. கேட்டுக் கொள்கிறது. (5)

## மந்திரி நஷ்டஈடு கோரிய வழக்கு ஒத்திவைப்பு

அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட், (லேக் ஹவுஸ்) நிறுவனத்தினிடமிருந்து ரூபா ஒன்றரை லட்சம் நஷ்ட ஈடுகோரி நீர்ப்பாசன மந்திரி தாக்கல் செய்த மனுவில் பிரதிவாதி கம்பெனி தங்கள் வழக்கை கூறி முடித்துள்ளனர்.

நீர்ப்பாசன, மின்சார, பெருந்தெருக்கள் மந்திரியான திரு. சேனநாயக்கா தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு, கொழும்பு மாவட்ட நீதிபதி திரு. டி. கியூ. எம். சிரிமான்ன முன் விசாரிக்கப்பட்டது.

தான் வழக்கை முடித்துக் கொள்வதாக பிரதிவாதிக் கம்பெனியின் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. எரிக். எஸ். அமரசிங்க நீதிபதியிடம் தெரிவித்தார்.

உரை நிகழ்த்துவதற்காக செப்டெம்பர் 2-ம் திகதி வரை, வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மனுதார் சார்பாக ஜனாப் ஐ. ஏ. காதர் அனுசரணையுடன் திரு. நிமல் சேனநாயக்காவும் செல்வி எம். எஸ். செனரத்தினவும் ஆஜராகினர்.

வழக்கறிஞர் திரு. ஜே. ஓ. சா. பண்டாரநாயக்காவின் அனுசரணையுடன் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் எரிக் எஸ். அமரசிங்க, சேனவிஜயவர்தன ஆகியோர் பிரதிவாதி கம்பெனி தரப்பில் ஆஜராகினர். (ல)



ஆகஸ்ட் மாதம் 14-ம் திகதி இரு விசேஷ முத்திரைகள் வெளியிடப்படும். இதில் ஒன்று 1 ரூபா 10 சதம் பெறுமதி உடையது. அனைத்துலக தபால் சங்கத்தின் புதிய தலைமைக் காரியாலயம் திறக்கப்படுவதையிட்டே இந்த முத்திரைகள் வெளியிடப்படுகின்றன. (ர)

## ஆசிரிய பதவிகள் ஐயாயிரம்

கல்விப் பொதுத் தராதர விஞ்ஞான உயர் பரீட்சையில் செய்முறை பாடங்கள் நடத்தப்படமாட்டாது. பாடசாலையில் இருநேரமும் கல்வி போதிக்கப்படும். அக்டோபர் 1-ம் திகதி முதல் 5000 பேருக்கு ஆசிரிய பதவிகள் வழங்கப்படும்.

கல்வி மந்திரி ஜனாப் பதியுதீன் மஹ்மூத் நேற்று தனது அமைச்சில் நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டின்போது மேற்கூறிய தகவல்களைத் தெரிவித்தார்.

கல்வி முறையில் ஏற்படுத்தப்படும் இந்த மாறுதல்களில் தற்சமயம் நகர்ப்புற பாடசாலை மாணவர்களுக்கு கிடைக்கும் அதே வசதிகள் கிராமப்புற மாணவர்களுக்கும் கிடைக்குமென மந்திரி கருதுகிறார்.

க. பொ. த. விஞ்ஞான உயர் பரீட்சை செய்முறைப் பாடங்கள் அடுத்த வருடம் டிசம்பர் முதல் ரத்துச் செய்யப்படும்.

இரு நேரமும் வகுப்புகள் நடத்துவதால் விஞ்ஞான பாடங்கள் படிக்கும் மாணவர்களுக்கு செய்முறை வகுப்புகளில் கலந்து கொள்ளவும், விளையாட்டு மற்றும் கலை நிகழ்ச்சிகளில் ஈடுபடவும் நேரம் கிடைக்குமென கூறப்படுகிறது.

## படம் பார்க்கப் போன மாணவர்களால் கலாட்டா!

பேராதனை இலங்கைப் பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவர்கள் இருவர் கண்டியில் உள்ள தியேட்டர் ஒன்றில் வைத்து இனம் தெரியாத சில வாலிபர்களால் நையப்புடைக்கப்பட்டனராம்.

இளைஞர் கூட்டம் ஒன்றிற்கும், பட்டதாரி மாணவர்களுக்கும் இடையில் இடைவேளையின்போது எழுந்த வாக்குவாதம் பலத்த மோதலில் சென்று முடிந்ததாகத் தெரிகிறது.

படம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் பட்டதாரி மாணவர்கள் கூச்சல் போட்டு பரிகாசம் செய்ததே இக் கைகலப்பிற்கான மூலகாரணம் என தெரிகிறது.

மின் விளக்குகள் எல்லாம் அணைக்கப்பட்டு தியேட்டருள் படம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் தட்டுத்தடுமாறி வந்த ஒருவர் அருகிலிருந்த கதிரை ஒன்றில் அமர்ந்தாராம். அவர் அமர்ந்தது உடைந்து போன ஓர் கதிரையாக இருந்ததால் அவர் கீழே விழுந்துவிட்டார். இதைக் கவனித்த பட்டதாரி மாணவர்கள் கூச்சல் போட்டுப் பரிகசித்தனராம்.

தொடர்ந்து படம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் இளைஞர் கூட்டத்தினரின் அபிமான சினிமா நட்சத்திரத்தின் படத்தை திரையில் காட்டியபோது இவர்கள் மீண்டும் கூச்சலிட்டார்களாம்.

இதனால் கொதிப்படைந்த இளைஞர் கோஷ்டியினர் இடைவேளையின்போது அந்த இரு பல்கலைக் கழக மாணவர்களையும் இழுத்துப் போட்டு நையப் புடைத்தார்கள் எனத் தெரிகிறது. (— 7)


### அழகிய பிரசியர் அணிந்து

கவர்ச்சியுடன் திகழுங்கள்



கூட்டிக் குறைக்கும் வசதியுடைய "கப்" இணைந்த எலாஸ்டிக் பட்டிகளைக் கொண்டு இறக்குமதி செய்யப்பட்ட புடவைகளின் மூலம் இந்த அழகிய பிரசியர் தைக்கப்படுகின்றது. எந்தவொரு பண்டிகைக்கும் அணியக்கூடிய விதத்தில் இதமாகவும் சொகுசாகவும் இருக்கும். இந்த பிரசியர் உங்கள் அழகிற்கு மெருகேற்றி, சௌகரியம் தருகின்றது. முனைப்பகுதி வளைவில் இறுக்கமோ வசதியின்மையோ இன்றி சரியான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனை உடலுக்கு சரியாக அமையாதா என்னும் கவலை இல்லை. வெள்ளை, ரோஸ், கறுப்பு ஆகிய 3 நிறங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். [நிறத்தைக் குறித்து எழுதவும்].

முற்றிலும் புதிய பாணி. அதுதான் இந்த அழகிய பிரசியர். உங்கள் அளவைக் குறித்து இன்றே எமக்கு எழுதுங்கள். விலை ரூபா 5/50. தபாற் செலவு இலவசம்.

வி. பி. பி. ஏற்றுக் கொள்ளப்படும்.

**அனஸ்கோ ஏஜன்ஸீஸ், (TH)**

191/1, ஹைலெவல் வீதி, கொழும்பு 6.



### அன்பும் காதலும்

நிரந்தரமாவதற்கு, வேண்டியவர்களை அடைவதற்கு, வேண்டாதவர்களை தவிர்ப்பதற்கு, திருமணம் நடைபெறுவதற்கு, கொடியவர்களை அடக்குவதற்கு, பரீட்சைகளில் சித்தியடைவதற்கு, வழக்கு என்பனவற்றில் வெற்றியடைவதற்கு, நோய் பீதி ஒழிந்து, முன்னேற்றத்திற்கு வழி செய்து கொடுக்கப்படும்.

எழுதுங்கள் அல்லது நேரில் சந்தியுங்கள்.

அரசாங்க அனுமதி பெற்ற குப்த விஞ்ஞானரீதி

**பி. எம். திஸ்ஸாநாயக்க,**

103, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, மருதானை.

தொலைபேசி: 33955.


இப் பத்திரிகையை அச்சிட்டவர்: சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேன மாவத்தை, கொழும்பு — 12 (இலங்கை). வெளியிட்ட திகதி 31 ஜுலை 1970
Thanthi 5, Gunasena Mawatha, Colombo 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org